## 2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

முன்னிலை : **திருமதி. ஆர்.எல். பிரியதர்ஷினி, பி.ஏ., பி.எல்.,**
2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

2026 ம் ஆண்டு ஜூன் மாதம் 18 ம் நாள் வியாழக்கிழமை

**I.A.No.24/2026 and I A No.23 in O.S.No.410/2019**

1) வசந்தா (இறப்பு)
2) வேலு
3) மாரியம்மாள்
4) ஜெயக்குமார் ...மனுதார்கள்/வாதிகள்

**//எதிர்//**

1) சமுத்திரம்
2) கோபால்
3) ஐயப்பன்
4) முத்துக்குட்டி
5) தங்கமணி
6) அர்ஜுனன் ...எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக 17.06.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.க.சிவகார்த்தீஸ்வரன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.பாதுஷா அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டு, ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் வழங்கும்,

**பொதுவான உத்தரவு**

I) மனுதாரர்கள் தரப்பில் மேலப்பாளையம் சார்பதிவாளர் மற்றும் நில ஒப்படைவு சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகள் ஆகியோர்களை கூடுதல்

சாட்சிகளாக விசாரணை செய்வதற்காக மீண்டும் வழக்கை ரீ–ஓப்பன் செய்து உத்தரவிடக்கோரியும்,

ii) மனுதாரர்கள் தரப்பில் மேலப்பாளையம் சார்பதிவாளர் மற்றும் நில ஒப்படைவு சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகள் ஆகியோர்களை கூடுதல் சாட்சிகளாக விசாரணை செய்ய அனுமதி அளித்து உத்தவிட வேண்டியும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) மனுவின் சுருக்கம்</u>**

மனுதாரர்கள் தரப்பில் 02.03.2026 அன்று வாதுரைக்காக பிராதில் கூறியுள்ள சங்கதிகளை நிரூபணம் செய்யும் பொருட்டு தாவா சொத்து பதிவு செய்யப்பட்டுள்ள முன் ஆவண எண் 763/1992 ஆவணம் சம்பந்தமாக மேலப்பாளையம் சார்பதிவாளர் மற்றும் நில ஒப்படைவு சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகள் ஆகியோர்களை இவ்வழக்கில் விசாரணை செய்யப்படாமல் விடுபட்டுள்ளனர். மேற்படி சாட்சிகள் இவ்வழக்கிற்கு முக்கியமான சாட்சிகளாகும். மனுதாரர் சாட்சிகளை விசாரணை செய்யும் போது எதிர்மனுதாரர்கள் தரப்பு ஆவணங்களின் தன்மையை முழுமையாக நீதிமன்றத்திற்கு எடுத்து கூற இயலவில்லை. எனவே மேற்படி சாட்சிகளை விசாரணை செய்ய அனுமதி அளித்து உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3) 4ம் எதிர்மனுதாரரல் தாக்கல் செய்யப்பட்டு ஏனைய எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>**

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர்களின் முன் ஆவணமாக 763/1992 என்ற ஆவணத்தை முதன் முதலாக இந்த மனுவில் தான் குறிப்பிட்டுள்ளார். மேற்படி ஆவணம் பொது ஆவணம் ஆகும். அந்த ஆவணத்தை சார்பதிவாளர் அலுவலகத்தில்

மனுதாரரே கேட்டு வாங்கி தாக்கல் செய்யலாம். மேற்படி ஆவணத்திற்காக சார்பதிவாளரை விசாரிக்க மனுதாரர் கோரியுள்ள மனுக்கள் தேவையற்ற ஒன்றாகும். மேலும் நில ஒப்படைவு அலுவலரை விசாரிக்க கேட்டு தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யக்கூடியதாகும். வாதிகள் உரிமை சம்பந்தமாக அசல் வழக்கை தாக்கல் செய்யாமல் மாறாக அனுபவம் சம்பந்தமாக அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளனர். எனவே வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாக்கல் செய்துள்ள இம்மனு எதிர்மனுதாரர்கள் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**4) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.**

5) இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

6) மனுதாரர் தரப்பில் தாவா சொத்து தொடர்பான பதிவு செய்யப்பட்ட முன் ஆவணம் பதிவு எண் 763/1992 சம்பந்தமாக சார்பதிவாளரை விசாரிக்க வேண்டும் என்று மனுதாரர் தரப்பில் கூறப்பட்டது. அசல் வழக்கானது பிராது தபசில் சொத்தை அமைதியான முறையில் அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ அவர்களது வகையாட்களோ இடைஞ்சல் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) மனுதாரர் கூறும் தாவா சொத்து சம்பந்தமான முன் ஆவண பதிவு எண் 763/1992 ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்து அந்த ஆவணத்தை மனுதாரர் நிரூபித்தால் போதுமானதாகும். மேற்படி முன் ஆவண பதிவு எண் 763/1992 குறித்து மனுதாரர் வழக்குரையில் எதுவும் கூறவில்லை. வழக்குரையில் கூறாத சங்கதிகளை குறித்து சாட்சியம்

அளிக்க முடியாது. மேற்படி முன் ஆவணம் குறித்து ஏன் சார்பதிவாளரை விசாரிக்க வேண்டும் என்று மனுதாரர் குறிப்பாக கூறவில்லை. மேலும் முன் ஆவணம் பதிவு செய்யப்பட்டதில் பிரச்சினை ஏதேனும் ஏற்பட்டாத என்பது குறித்தும் மனுதாரர் மனுவில் கூறவில்லை. எனவே மனுதாரர் மேலப்பாளையம் சார்பதிவாளரை இந்த வழககில் விசாரிக்க வேண்டும் என்று கோரியுள்ளது இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

8) எதிர்மனுதாரர் தரப்பில் கட்சி செய்யப்படும் நில ஒப்படைவு சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளை இவ்வழக்கில் விசாரிக்க வேண்டும் என்று மனுதாரர் தரப்பில் கூறப்பட்டது. நில ஒப்படைவு சம்பந்தப்பட்ட அதிகாரி யார் என்று மனுதாரர் மனுவில் குறிப்பாக கூறவில்லை. அவர்களை எதற்காக விசாரிக்க வேண்டும் என்றும் கூறவில்லை. நில ஒப்படைவு ஆவணம் பொது ஆவணம் என்பதால் அதை மனுதாரர் சான்றிட்ட நகலை பெற்று தாக்கல் செய்தால் போதுமானதாகும். நில ஒப்படைவு செய்யப்பட்டது சம்பந்தமாக பிரச்சினை ஏதேனும் ஏற்பட்டதாகவோ அதுகுறித்து விசாரனை செய்யப்பட வேண்டும் என்றோ மனுதாரர் கேட்கவில்லை. எனவே மேற்படி நில ஒப்படைவு ஆவணத்தை பொறுத்து சாட்சியம் அளிக்க நில ஒப்படைவு அதிகாரியை சாட்சியாக விசாரிக்க வேண்டியது அவசியம் ஏற்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9) மேலே விவாதித்தன் அடிப்படையில் சார்பதிவாளரை முன் ஆவண பதிவு எண் 763/1992 சம்பந்தமாக எதற்காக விசாரனை செய்ய வேண்டும் என்று கூறாத நிலையிலும் பதிவு எண் 763/1992 ஆவணத்தை குறித்து வழக்குரையில் எதுவும் கூறாத நிலையிலும் நில ஒப்படைப்பு சம்பந்தமான அதிகாரிகள் யார் என்று கூறாத நிலையிலும் எதற்காக நில ஒப்படைப்பு

அதிகாரியை விசாரிக்க வேண்டும் என்று கூறாத நிலையிலும் மனுதாரர் தாக்கல் செய்த இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும் அசல் வழக்கானது வாதுரைக்காக வைக்கப்பட்டுள்ள நிலையிலும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 6 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் இந்த வழக்கை மேலும் தாமதப்படுத்தும் நோக்கத்தில் இம்மனுவை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார் என்று தெரியவருவதால் இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**10) இறுதியாக**

இம்மனுக்கள் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 18 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
orders uploaded on 18.06.2026
Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.06.18 16:31:48 +0530

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருநெல்வேலி

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் </u>- இல்லை
<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் </u>- இல்லை

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
orders uploaded on 18.06.2026
Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.06.18 16:31:56 +0530

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

2 வது கூடுதல் மாவட்ட
உரிமையியல் நீதிமன்றம்,
திருநெல்வேலி **I.A.No.24/2026**
**and I A No.23 in O.S.No.410/2019**
சீரான – உத்தரவு
**நாள்–18.06.2026**